ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

**திகதி** 2020.04.28

## 2019ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது

**1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 35ஆம் பிரிவின்படி இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையின் எழுபதாவது ஆண்டறிக்கை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் தேசமானிய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன் அவர்களால் இலங்கையின் பிரதம அமைச்சரும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சருமான மாண்புமிகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு சமா்ப்பிக்கப்பட்டது.**




**மத்திய வங்கியின் ஆளுநர் தேசமானிய பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷ்மன் அவர்கள் 2019ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையை பிரதம அமைச்சரும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சருமான மாண்புமிகு மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு சமா்ப்பிக்கின்றார். மத்திய வங்கியின் சிரேஷ்ட துணை ஆளுநர் முனைவர் பீ.நந்தலால் வீரசிங்க மற்றும் பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் முனைவர் சந்திரநாத் அமரசேகர ஆகியோரையும் படத்தில் காணலாம்.**

## ஆண்டறிக்கையில் பிரதிபலிக்கப்பட்டவாறு 2019இல் இலங்கைப் பொருளாதார செயலாற்றத்தின் சுருக்கம் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது:

## பொதுநோக்கு

பணவீக்க அழுத்தங்கள் சராசரியாக மட்டுப்படுத்தப்பட்டதாகவிருந்த வேளையில், பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டு வழிமுறைகள் வெளிநாட்டுத்துறை சமமின்மைகளைத் திருத்துவதற்கு ஓரளவிற்கு துணைபுரிந்த போதிலும் 2019ஆம் ஆண்டு காலப்பகுதியில் உண்மைப் பொருளாதார வளர்ச்சி நியதிகளில் இலங்கையின் மோசமான செயலாற்றம் தொடர்ந்திருந்தது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் சுற்றுலாத்துறையின் மீது கடுமையான தாக்கமொன்றைக் கொண்டிருந்ததுடன் அவற்றின் பாதகமான கசிவுத்தாக்கங்கள் பொருளாதாரம் முழுதும் உணரப்பட்டு பொருளாதாரத்தின் மந்தமான வளர்ச்சியை மோசமடையச் செய்து வியாபார நம்பிக்கையை மேலும் தளர்வடையச் செய்திருந்தன. சென்மதி நிலுவை மற்றும் செலாவணி வீதம் மீதான அழுத்தங்களைக் குறைப்பதனை இலக்காகக் கொண்ட கொள்கை வழிமுறைகள் 2019இல் தொடர்ந்தன. இவை பொருளாதாரத்தை மீட்சியடையச் செய்வதற்காக எடுக்கப்பட்ட படிமுறைகளுடன் இணைந்து இறைத்துறையின் குறிப்பிடத்தக்களவிலான நழுவல்களுக்கு பங்களிப்புச் செய்தன. தீவிரமான வானிலை நிலைமைகளும் அதன் விளைவான உள்நாட்டு உணவு வழங்கல்களிற்கான இடையூறுகளும் நுகர்வோர் விலைகளில் சில தளம்பலுக்குக் காரணமானதெனினும் குறைவான கேள்வி நிலைப்பாடுகள் ஆண்டு காலத்தில் தாழ்ந்த பணவீக்கத்தின் தொடர்ச்சிக்கு அனுமதித்தன. மந்தமான பொருளாதார செயற்பாடு மற்றும் பலவீனமான வியாபார நம்பிக்கை போன்றவற்றினால் வழிநடாத்தப்பட்டு தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி விரைவாகக் குறைவடைந்து நிதியியல் துறையின் செயலாற்றத்தினைப் பாதித்திருந்தது. மட்டுப்படுத்தப்பட்ட பணவீக்கம், நன்கு உறுதிநிலைப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் வெளிநாட்டுத் துறையில் நலிவடைந்த அழுத்தங்களுக்கு மத்தியில் மந்தமான பொருளாதார செயற்பாட்டிற்கு ஆதரவளிக்க வேண்டிய தேவையினைக் கருத்திற்கொண்டு மத்திய வங்கி தளர்த்தப்பட்டதொரு நாணயக்கொள்கை நிலைப்பாட்டினைப் பின்பற்றியதுடன் சந்தை வட்டி வீதங்களைக் குறைப்பதனை இலக்காகக் கொண்டு நாணயக்கொள்கை வழிமுறைகளினை பொருளாதாரத்திற்கு ஊடுகடத்துவதனை விரைவுபடுத்துவதற்கான படிமுறைகளை எடுத்திருந்தது.

### பேரண்டப்பொருளாதார செயலாற்றம் (2015-2019)

| குறிகாட்டி | அலகு | 2015 | 2016 | 2017 | 2018 (அ) | 2019 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை (இ)** | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 5.0 | 4.5 | 3.6 (அ) | 3.3 (ஆ) | 2.3 |
| நடைமுறை சந்தை விலையில் மொ.உ.உ. | ரூ.பில் | 10,951 | 11,996 | 13,328 (அ) | 14,366 (ஆ) | 15,016 |
| தலைக்குரிய மொ.உ.உ. (ஈ) | ஐ.அ.டொ. | 3,842 | 3,886 | 4,077 (அ) | 4,079 (ஆ) | 3,852 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | |
| வர்த்தக நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -10.4 | -10.8 | -11.0 (அ) | -11.7 | -9.5 |
| நடைமுறை கணக்கு நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -2.3 | -2.1 | -2.6 | -3.2 | -2.2 |
| திரண்ட இறை நிலுவை | ஐ.அ.டொ.மில் | -1,489 | -500 | 2,068 | -1,103 | 377 |
| வெளிநாட்டு அலுவர்சார் ஒதுக்குகள் | ஐ.அ.டொ.மில் | 7,304 | 6,019 | 7,959 | 6,919 | 7,642 |
| **இறைத்துறை (இ) (உ)** | | | | | | |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -2.3 | -0.6 | -0.7 | -1.2 | -2.7 |
| முதன்மை நிலுவை | மொ.உ.உ. இன் % | -2.9 | -0.2 | 0.02 | 0.6 | -0.8 |
| திரண்ட நிலுவை | மொ.உ.உ. இன் % | -7.6 | -5.3 | -5.5 | -5.3 | -6.8 |
| மத்திய அரச படுகடன் (ஊ) | மொ.உ.உ. இன் % | 78.5 | 79.0 | 77.9 | 83.7 | 86.8 |
| **நாணயத்துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (எ) | % | 17.8 | 18.4 | 16.7 | 13.0 | 7.0 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ( $M_{2b}$ இல்)(எ) | % | 25.0 | 21.6 | 14.7 | 15.9 | 4.3 |
| ஆண்டுச்சராசரிப் பணவீக்கம் (ஏ) | % | 2.2 | 4.0 | 6.6 | 4.3 | 4.3 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவானது தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உ. மதிப்பீடுகள் (அடித்தள ஆண்டு 2010) அடிப்படையாகக் கொண்டது
(ஈ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(உ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2019 மார்ச்சு 31 கிடைக்கப்பெற்ற 2017 மற்றும் 2018ற்கான திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் அடிப்படையிலானவை
(ஊ) கூட்டுறவு மொத்தவிற்பனை ஸ்தாபனத்திற்கு 2003 நவம்பரில் வழங்கப்பட்ட ரூ. 4,397 மில்லியன் பெறுமதியான அரசின் திறைசேரி முறிகள் (2016 நவம்பரில் முதிர்ச்சியானது) மற்றும் 2013 மார்ச்சில் சிறிலங்கன் எயர்லைன்சிற்கு முதலீடு வழங்குவதற்காக வழங்கப்பட்ட ரூ. 13,125 மில்லியன் (2018 யூன் 01 முதிர்ச்சியானது) மற்றும் 2012 சனவரியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய ரூ. 78,441 மில்லியன் (இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01 அன்று முதிர்ச்சியானதுடன் 2019 இறுதியில் வெளிநின்றது ரூ. 56,662 மில்லியனதாகும்) என்பவை உள்ளடங்கலாக.
(எ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஏ) கொ.வி.சு. (2013=100) அடிப்படையாகக் கொண்டவை

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

## பேரண்டப் பொருளாதாரத் தோற்றப்பாடு

பொருளாதாரத்தினை மீட்சியடையச் செய்வதற்கு எடுக்கப்பட்ட கொள்கை வழிமுறைகளுக்கு ஆரம்பப் பதிலிறுப்புக்களை உள்நாட்டுப் பொருளாதார செயற்பாடு காட்டத் தொடங்கியதுடன் வியாபார மனப்பாங்குகள் 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மேம்பாடடைகின்ற பொழுது கொவிட்-19 உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவல், இலங்கை உட்பட அனைத்து நாடுகளாலும் பின்பற்றப்பட்ட கட்டுப்பாட்டு வழிமுறைகள் மற்றும் அதன் விளைவான உலகப் பொருளாதாரத்தின் எறிவுசெய்யப்பட்ட சுருக்கம் 2020இல் நாட்டின் பொருளாதாரச் செயலாற்றம் மீது மேலும் நிச்சயமற்றதன்மைகளைத் தூண்டியுள்ளன. குறுங்காலத்தில், பொருளாதாரம் அதன் வளர்ச்சி, இறை, வெளிநாட்டு மற்றும் நிதியியல் துறைச் செயலாற்றம் என்பனவற்றின் நியதிகளில் தீவிரமாகப் பாதிப்படையக்கூடிய அதேவேளையில் பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களது இன்னல்களுக்கும் காரணமாகக்கூடும். தாழ்ந்த பணவீக்கச் சூழலின் நியதிகளில் நாணயக்கொள்கை இடைவெளி மற்றும் கைத்தொழில் விதிமுறைகளுக்கு மேலாக மூலதன மற்றும் திரவத்தன்மை தாங்கிருப்புக்கள் பேணப்படுவதனால் உருவாக்கப்பட்ட வங்கித்தொழில்துறையின் இடைவெளி போன்றவை வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் மீதான சுமைகளைக் குறைப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்கு மத்திய வங்கியை இயலச்செய்திருந்தன. உலகளாவிய நோய்த் தொற்றுப்பரவலினால் எழுந்த தற்காலிகப் பின்னடைவுக்குப் புறம்பாக, நீண்டகால அமைப்பியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கும் ஏற்றுமதிச் சார்பினை மேம்படுத்துவதற்கும், வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதற்கும், புத்துருவாக்கத்திற்கு வசதியளிப்பதற்கும் காரணி உற்பத்தித்திறன்

மற்றும் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும், கொள்கை தாங்கிருப்புக்களை மேம்படுத்துவதற்குமான வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் சீர்திருத்தங்கள், காலதாமதமின்றி நடைமுறைப்படுத்தப்படுமாயின், எதிர்வரும் காலப்பகுதியில் நீடித்துநிலைத்திருப்பதும் சமத்துவமானதுமான பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்வதற்கும் சுபீட்சமிக்கதொரு நாடாக மாறுதல் போன்ற விரும்பப்பட்ட பெறுபேறுகளை அடைந்துகொள்வதற்கு இலங்கையை இயலச்செய்யும்.

நடுத்தரகால பேரண்டப்பொருளாதாரக் கட்டமைப்பு (அ)

| குறிகாட்டி | அலகு | 2018 (ஆ) | 2019 (இ) | எறிவுகள் 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|---|---|---|
| உண்மைத்துறை (ஈ) | | | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 3.3 (இ) | 2.3 | 1.5 | 4.5 | 6.0 | 6.2 | 6.5 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ.பில் | 14,366 (இ) | 15,016 | 15,925 | 17,466 | 19,443 | 21,690 | 24,245 |
| தலைக்குரிய மொ.உ.உ. | ஐ.அ.டொ. | 4,079 (இ)(உ) | 3,852 | 3,940 | 4,166 | 4,473 | 4,813 | 5,190 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ. இன் % | 30.4 (இ)(ஊ) | 27.4 | 26.8 | 27.3 | 27.8 | 28.1 | 28.4 |
| உள்நாட்டு சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 23.0 (இ)(ஊ) | 21.3 | 20.7 | 21.3 | 22.5 | 23.6 | 24.5 |
| தேசிய சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 27.3 (இ)(ஊ) | 25.3 | 23.7 | 24.7 | 25.6 | 26.2 | 26.8 |
| வெளிநாட்டுத்துறை | | | | | | | | |
| வர்த்தக இடைவெளி (ஈ) | மொ.உ.உ. இன் % | -11.7 | -9.5 | -7.7 | -9.8 | -9.7 | -9.5 | -9.2 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ.மில் | 11,890 | 11,940 | 8,740 | 11,117 | 12,421 | 13,594 | 15,380 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ.மில் | 22,233 | 19,937 | 15,415 | 20,135 | 22,092 | 23,815 | 26,135 |
| நடைமுறை கணக்கு நிலுவை (ஈ) | மொ.உ.உ. இன் % | -3.2 | -2.2 | -3.1 | -2.6 | -2.2 | -1.9 | -1.6 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | இறக்குமதி மாதங்கள் | 3.7 | 4.6 | 5.6 | 4.6 | 4.6 | 4.6 | 4.6 |
| இறைத் துறை (ஈ) | | | | | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ. இன் % | 13.5 (எ) | 12.6 | 9.8 | 11.8 | 13.5 | 14.1 | 14.5 |
| செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | மொ.உ.உ. இன் % | 18.7 (எ) | 19.4 | 17.7 | 18.6 | 19.1 | 19.2 | 19.4 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -1.2 (எ) | -2.7 | -5.1 | -3.6 | -2.1 | -1.5 | -1.0 |
| முதன்மை நிலுவை | மொ.உ.உ. இன் % | 0.6 (எ) | -0.8 | -2.8 | -1.0 | 0.5 | 0.7 | 1.1 |
| திரண்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை | மொ.உ.உ. இன் % | -5.3 (எ) | -6.8 | -7.9 | -6.8 | -5.6 | -5.2 | -4.9 |
| மத்திய அரச படுகடன் | மொ.உ.உ. இன் % | 83.7 (எ) | 86.8 | 92.4 | 89.4 | 84.3 | 80.5 | 76.3 |
| நாணயத் துறை மற்றும் பணவீக்கம் | | | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (ஏ) | % | 13.0 | 7.0 | 9.3 | 12.9 | 12.7 | 12.5 | 12.5 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_{2b}$ இல்) (ஏ) | % | 15.9 | 4.3 | 4.0 | 10.0 | 12.2 | 13.0 | 13.0 |
| ஆண்டுச்சராசரிப் பணவீக்கம் (ஐ) | % | 4.3 | 4.3 | 4.5 | 5.0 | 5.0 | 5.0 | 5.0 |

(அ) 2020 மார்ச் வரை கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)
(உ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(ஊ) 2018இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த முதலீடு, உள்நாட்டு சேமிப்புக்கள் மற்றும் தேசிய சேமிப்புக்கள் என்பனவற்றை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் முறையே 28.6%, 21.2% மற்றும் 25.4% ஆக திருத்தியமைத்துள்ளது.
(எ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2020 மார்ச் 31இல் வெளியிடப்பட்ட 2018 இற்கான திருத்தப்பட்ட மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது
(ஏ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஐ) கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013=100) அடிப்படையிலானது


மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

## துறைவாரியான அபிவிருத்திகள்

## உண்மைத் துறை அபிவிருத்திகள்


தொகைமதிப்புப் மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி, இலங்கைப் பொருளாதாரம் 2018இன் 3.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2019இல் 2.3 சதவீதமான குறைந்தளவான வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தது. பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளும் நேர்க்கணியமான ஆனால் மெதுவான வளர்ச்சி வீதங்களைப் பதிவுசெய்திருந்தன.

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு
நடவடிக்கை வாரியான பங்களிப்பு





செலவீட்டு அணுகுமுறையின் அடிப்படையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின்படி 2019இற்கான வளர்ச்சியானது நுகர்வில் ஏற்பட்ட வளர்ச்சி மற்றும் பண்டங்கள் பணிகளின் வெளிநாட்டு நிலுவையில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பவற்றினால் தூண்டப்பட்டிருந்தது.

சேமிப்பு, முதலீடு மற்றும் சேமிப்பு-முதலீடு இடைவெளி
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)



## தேசிய வெளியீடு, செலவினம் மற்றும் வருமான நிழற்படம் - 2019




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

# அரசாங்கம் தனியார் துறையுடன் இணைந்து பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புக்களை 2019இல் தொடர்ந்தும் வழங்கியிருந்தது


## பொருளாதார உட்கட்டமைப்பு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் ஒட்டுமொத்த போக்குவரத்துத் துறையின் மீது கணிசமானளவு தாக்கமொன்றை ஏற்படுத்தியிருந்தது...




வரட்சியான காலநிலை நிலைமைகளுக்கு மத்தியில் எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட வலு உருவாக்கத்தின் மீதான அதிகரித்த தங்கியிருத்தலின் காரணமாக வலு உருவாக்கத்துறைக்கான பெற்றோலிய விற்பனைகள் கணிசமாக வளர்ச்சியடைந்திருந்தது...

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி




### மின்சாரம்




இலங்கை மின்சார சபையின் விற்பனைகள் 2019 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் அட்டவணையிடப்பட்ட மின்சாரத் துண்டிப்புக்களுக்கு மத்தியில் மின்சாரத்தின் விற்பனைகள் ஆண்டுக்காலப்பகுதியில் சிறிதளவானதொரு வளர்ச்சியைப் பதவுசெய்திருந்தது...

### துறைமுக நடவடிக்கைகள்




துறைமுக நடவடிக்கைகள் 2019இல் விரிவாக்கமொன்றைக் காட்டியிருந்தன

### தொலைத்தொடர்பூட்டல்




100 நபர்களுக்கான இணைப்புக்களின் அடர்த்தி இலக்கங்கள்

## சமூக உட்கட்டமைப்பு

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக சுகாதாரம் மற்றும் கல்வி என்பவற்றின் மீதான அரச செலவினம் முறையே 1.6% மற்றும் 1.9% ஆகக் காணப்பட்டது.



அரச வைத்தியசாலைகளில்

- 1,000 நபர்களுக்கு 3.6 படுக்கைகள்
- 1,203 நபர்களுக்கு 1 மருத்துவர்
- 570 நபர்களுக்கு 1 தாதி

### சமுர்த்தி மானியம்



மொத்த சமுர்த்தி கொடுப்பனவுகள் 2018இன் ரூ. 39.2 மில்லியனிலிருந்து 2019இல் ரூ.44.7 மில்லியனுக்கு அதிகரித்திருந்தது

சமுர்த்தி பெற்றுக்கொள்ளப்படும் குடும்பங்களின் எண்ணிக்கை 2018இன் 1.4 மில்லியனிலிருந்து 2019இல் 1.8 மில்லியனுக்கு அதிகரித்திருந்தது





### எழுத்தறிவு

எழுத்தறிவு வீதம் 2017இன் 92.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2018இல் சிறிதளவில் வீழ்ச்சியடைந்திருந்தது.


92.5%






குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தொழிலின்மை வீதம் 2018இன் 4.4 சதவீதத்திலிருந்து 2019இல் 4.8 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியிலான தொழிலின்மை வீதங்கள் முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட முறையே 3.0 சதவீதம் மற்றும் 7.1 சதவீதத்திலிருந்து 2019இல் முறையே 3.3 சதவீதத்திற்கும் 7.4 சதவீதத்திற்கும் அதிகரித்திருந்தது.

தொழிலின்மை வீதம்




ஊழியச் சந்தை – 2019 (அ)





(அ) தற்காலிகமானது
தொ.ப.வீ. - தொழிற்படை பங்கேற்பு வீதம்

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

**பணவீக்கம்**

வழங்கல்பக்க இடையூறுகள் தற்காலிகமாக காணப்பட்டபோதிலும் முதன்மை மற்றும் மையப் பணவீக்கம் ஆகிய இரண்டும் 2019இல் விரும்பத்தக்க வீச்சான 4 - 6 சதவீத வீச்சிற்குள் நகர்ந்தமைக்கு மெதுவடைந்த கேள்வி நிலைமைகள் மற்றும் நன்கு கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பனவே முக்கிய காரணங்களாகும்.

முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்காண்டு)








## வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

இறக்குமதிச் செலவினத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட கொள்கைகள் வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவைகளின் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்திற்கு இட்டுச்சென்றிருந்தன. 2019இல் அரசாங்கத்தினால் பாரியளவு வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கிடையிலும் அரசாங்கம் மற்றும் மத்திய வங்கிக்கான குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களின் உதவியுடன் 2019இன் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மேம்பட்டிருந்தன. உள்நாட்டு மற்றும் உலகளாவிய அபிவிருத்திகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் சொத்துப்பட்டியல் முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் காரணமாக சில தற்காலிகமான தளம்பல்கள் காணப்பட்டமைக்கிடையிலும் நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களின் காரணமாக 2019 காலப்பகுதியில் செலவாணி வீதம் பரந்தளவிற்கு உறுதியாகக் காணப்பட்டது.


## சென்மதி நிலுவை




## உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடும் செலாவணி வீதமும்




## உறுதியான செலாவணி வீதம் மற்றும் ஒரு குறைக்கப்பட்ட நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையுடன் 2019இல் வெளிநாட்டுத்துறை தாக்குப்பிடிக்கக்கூடியதாக தொடர்ந்தும் இருந்தது...




இலங்கையின் வர்த்தக செயலாற்றம் குறிப்பிடத்தக்க மேம்பாட்டை 2019இல் காட்டியது...


- இறக்குமதிகள் கணிசமானளவு மெதுவடைந்தன
- ஏற்றுமதிகள் மிதமானளவு மேம்பட்டன

...2018 உடன் ஒப்பிடுமிடத்து ஐ.அ.டொலர் 2.3 பில்லியனால் வர்த்தகப் பற்றாக்குறை கணிசமாக குறைக்கப்படுவதற்கு வழிவகுத்தது.











உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களினால் சுற்றுலா ஒரு முக்கிய பின்னடைவினால் பாதிக்கப்பட்டது, ஆனால் எதிர்பார்க்கப்பட்டதைவிட விரைவான மீட்சி அவதானிக்கப்பட்டது...




பணிகளின் உட்பாய்ச்சல்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களின் மெதுவடைதலுக்கு புறம்பாக ஒரு மாற்றமில்லாத முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறையுடன் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை 2019இல் கணிசமானளவு சுருக்கமடைந்தது.


-2.8 ஐ.அ.டொ. பில்லியன் (2018)

-1.8 ஐ.அ.டொ. பில்லியன் (2019)

முக்கியமாக வர்த்தகப் பற்றாக்குறையின் சுருக்கத்தின் காரணமாக...

*2018இன் தொகைகள் சிறிய கோல்களினால் பிரதிபலிக்கப்படுகின்றன

ஆண்டுக்காலப்பகுதியில் நிதியியல் கணக்கிற்கு கணிசமான உட்பாய்ச்சல்கள் அவதானிக்கப்பட்டன...




...இதன்படி, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரித்தன.

7.6 ஐ.அ.டொ. பில்லியன் (2019)

6.9 ஐ.அ.டொ. பில். (2018)





கொவிட்-19 பரவல் குறிப்பாக ஏற்றுமதிகள், சுற்றுலா வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களைப் பாதித்து 2020இல் வெளிநாட்டுத்துறைக்கு கணிசமான சவால்களை விடுக்கக்கூடும்.

## இறைத் துறை அபிவிருத்திகள்


அரசிறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி மற்றும் அரச செலவினத்தில் ஏற்பட்ட உயர்வு என்பனவற்றிற்கு மத்தியில் 2019இல் இறைத்திரட்சி செயன்முறை குறிப்பிடத்தக்களவான சவால்களை முகங்கொடுத்திருந்தது.

இறைத்துறை செயலாற்றத்தின் திரட்டு
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மத்திய அரசின் படுகடன் 2018இன் இறுதியில் காணப்பட்ட 83.7 சதவீதத்திலிருந்து 2019இன் இறுதியில் 86.8 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது. இது வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்கான உயர்ந்தளவான தேறிய கடன்பெறுகைகளின் தாக்கம் மற்றும் 2019இல் பெயரளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட ஒப்பீட்டு ரீதியிலான மிதமான வளர்ச்சி என்பவற்றைப் பிரதிபலித்திருந்தது.

மத்திய அரச படுகடன்
(மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)




## இறைத்துறையின் செயலாற்றம்



## நாணயத்துறை அபிவிருத்திகள்


குறைவான கேள்வியினால் தூண்டப்படும் பணவீக்க அழுத்தங்கள் மற்றும் நன்கு கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் போன்ற சூழ்நிலையொன்றில், பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சிக்கு உதவுவதற்கும் தனியார் துறைக்கான கொடுகடன் வழங்கலில் காணப்படும் மந்தமான வளர்ச்சிப் பிரச்சினையை தீர்ப்பதற்குமாக இலங்கை மத்திய வங்கி 2019இல் தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலையினைப் பின்பற்றியிருந்தது.

துணைநில் வீத வீச்சு மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்




வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சியின் காரணமாக, 2019ஆம் ஆண்டுப்பகுதியில் விரிந்த பணத்தின் வளர்ச்சி ($M_{2b}$) தொடர்ந்தும் குறைவடைந்திருந்தது. நாணயக்கொள்கைளைத் தளர்த்துவதற்காக மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட வழிமுறைகளின் உதவியுடன் ஆண்டின் இறுதியில் உண்மைக் கொடுகடன் பகிர்ந்தளிப்புக்களில் மீட்சியொன்று அவதானிக்கப்பட்ட போதிலும் இவ்வாண்டுப்பகுதியில் உயர்ந்த வட்டி வீதங்கள், கொள்கைகளின் நிச்சயமற்றத் தன்மை, உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களைத் தொடர்ந்து வியாபார நம்பிக்கை குறைவடைந்தமை மற்றும் குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகள் என்பனவற்றின் காரணமாக 2019இல் தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சியானது கடுமையானதொரு வீழ்ச்சியைப் பதிவுசெய்திருந்தது.

விரிந்த பண வளர்ச்சி மற்றும் பங்களிப்பு



தனியார் துறைக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன்




## பொருளாதார நடவடிக்கைகளுக்கு புத்துயிரூட்டுவதற்காக இலங்கை மத்திய வங்கி ஓர் **தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை** நிலைப்பாட்டை 2019 மே முதல் பின்பற்றியதுடன் இதனை 2019 ஓகத்து மற்றும் 2020இன் முன்னைய பகுதியில் வலுவாக்கியது...


இதற்கு தாக்கமற்ற பணவீக்கம், நன்கு நிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்ப்புக்கள், ஓரளவு நிலையான வெளிநாட்டுத் துறை மற்றும் உலகளாவிய ரீதியில் நாணயக் கொள்கையின் அதிகளவிலான தளர்த்தல் என்பன ஆதரவளித்தன...




## கொடுகடன் பாய்ச்சல்களை மேம்படுத்துவதன் மூலம் **உள்ளாற்றலுக்கு குறைவான பொருளாதார வளர்ச்சிக்கு** புத்துயிரூட்டுவதற்காக 2019 மற்றும் 2020இன் முன்னைய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை மற்றும் ஒழுங்குபடுத்தல் வழிமுறைகள்...




### சந்தை வட்டி வீதங்களில் ஓர் கணிசமான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது




### கொடுகடனின் மிதமான ஆண்டுக்காண்டு வளர்ச்சி...

| | 2018 | 2019 |
|---|---|---|
| தனியார் துறைக்கான கொடுகடன் | 15.9 % | 4.3 % |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 40.7 % | 8.3 % |
| அரசிற்கான தேறிய கொடுகடன் | 16.1 % | 9.9 % |


### மிதமான நாணயக் கூற்றுக்கள்...




விரிந்த பணத்தின் வளர்ச்சி (ஆண்டுக்காண்டு)

### நுகர்வோர் விலைப் பணவீக்கம்* 2019 இல் பெருமளவுக்கு தாழ்ந்த மட்டங்களிலேயே இருந்தது...

இருப்பினும் உயர்ந்த உணவு பணவீக்கத்தினால் 2020இன் முன்னைய பகுதியில் பணவீக்கம் விரைவடைந்தது...




* ஆண்டுக்காண்டு கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் முதன்மைப் பணவீக்கத்தின் அசைவுகள்


2019இல் மையப் பணவீக்கம் பெருமளவிற்கு நிலையாகக் காணப்பட்டது...

மத்திய வங்கி, நடுத்தர காலப்பகுதியில் நடு ஒற்றை இலக்க மட்டத்தில் பணவீக்கத்தினை நிலைப்படுத்தும் அதேவேளையில், பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த வளர்ச்சியை எய்துவதற்கு ஆதரவளிக்கும் நோக்குடன் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் நாணயக் கொள்கையினை மேற்கொண்டது.

## நிதியியல் துறை அபிவிருத்திகள்

சொத்துக்களின் அடிப்படை, கொடுகடனின் தரம் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் இலாபத்தன்மை என்பனவற்றின் நியதிகளில், நிதியியல்துறையின் செயலாற்றம் மிதமடைந்தமைக்கு குறைவடைந்த பொருளாதார வளர்ச்சி, நிச்சயமற்ற கொள்கைகள் மற்றும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் காரணமாக முதலீட்டாளர் மனோபாவம் மோசடைந்தமை என்பனவற்றினால் உருவான சவால்மிக்க சூழலே காரணமாகும். நிதியியல் துறையில் ஆதிக்கம் செலுத்தும் வங்கித்தொழில்துறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் மிதமான விரிவாக்கத்தினை எடுத்துக்காட்டி கொடுகடனுக்கான குறைந்த கேள்வியின் தாக்கத்தினையும் மோசமடைந்த கொடுகடன் தரத்தின் சூழ்நிலையினைக் கருத்திற்கொண்டு இறுக்கமான கொடுகடன் நடைமுறைகளையும் பிரதிபலித்தன. சாதகமற்ற சந்தை நிலைமைகள் மற்றும் துறையின் பலவீனங்களின் காரணமாக, ஆண்டு காலப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளினதும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளினதும் செயலாற்றம் தேய்வடைந்திருந்தது. அதேவேளை, நிதியியல் நடவடிக்கை செயலணிக்குழு 2019 ஒத்தோபரில் அதன் சாம்பல் நிறப்பட்டியலிலிருந்து இலங்கையை நீக்கியதுடன் பணத்தூயதாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் என்பனவற்றை முன்னேற்றுவதில் இலங்கை அடைந்த கணிசமான முன்னேற்றங்களையும் அங்கீகரித்திருந்தது.

நிதியியல்துறை சொத்துக்களின் உள்ளடக்கம் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட குறிகாட்டிகள்



**அண்மைக்கால அபிவிருத்திகள் மற்றும் சமகால பிரச்சினைகள் தொடர்பிலான சிறப்புக் குறிப்புக்களின் பட்டியல்**

அத்தியாயம் 1இன் பகுதி 1.5இல் அடையாளப்படுத்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கு மேலாக 2019ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பின்வரும் சிறப்புக் குறிப்புக்கள் அண்மைக்கால அபிவிருத்திகள் மற்றும் சமகால பிரச்சினைகள் என்பவற்றை பகுப்பாய்வு செய்கின்றது.

1. உயர் நடுத்தர வருமான நாடொன்றாக இலங்கையின் முன்னேற்றம்
2. கொவிட்-19 மற்றும் இலங்கை: சவால்கள், கொள்கை பதிலிறுப்புக்கள் மற்றும் தோற்றப்பாடு
3. இலங்கையின் பொருளாதார மேலெழுச்சி - தேவையும் அதற்கான தயார்நிலையும்
4. வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல்
5. கிக் பொருளாதாரத்தின் தோற்றமும் அதன் சவால்களும்
6. நிலைத்துநிற்கும் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான வலு வழங்கல்
7. நடுத்தர வருமானப் பொறியிலிருந்து மீள்வதற்கான கல்விச் சீர்திருத்தங்கள்
8. பாரம்பரிய முறைகளை தகர்த்தல்: புள்ளிவிபரங்களின் பாரம்பரிய செயன்முறையை டிஜிட்டல் மயப்படுத்தல் எவ்வாறு பாதிக்கின்றது
9. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் தாக்கம்
10. குறைவடைந்த அரசிறைத் திரட்டல்களுக்கு மத்தியில் அரச செலவினத்தின் வினைத்திறனான முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்
11. ஒழுங்குபடுத்தல்களை உரிமம்பெற்ற வங்கிகளின் வணிக மாதிரிகளுடன் ஒருங்கிணைத்தல்: விகிதாசாரத்தன்மை
12. அரச பிணையங்களின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களுக்கான சந்தைநடைமுறைகளை நியமப்படுத்தல்
13. இலங்கையில் முறைசாரா பணம்கடன்வழங்கும் வியாபாரங்களை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டியதன் தேவைப்பாடு
14. முக்கிய பொருளாதார கொள்கை மாற்றங்களும் வழிமுறைகளும்: 2019